**பூஜாபிடிய பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 13 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 14 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் பூஜாபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பர்சஸ் 11 அளவான வதிவிட தரத்திலான கெதரவத்த காணியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | எதிர் காலத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை ஏடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பெண் அலுவலரிடமிருந்து தவனை அடிப்படையில் அறிவிடப்பட்ட ரூபா 167,582 ஆன கடன் தொகை பொது வைப்புக் கணக்கில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு அரச நிதியத்திற்கு செலவு வைப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2018 ஆண்டுல், விதவைகள் அநாதை நிதியத்திற்கு எழுதப்பட்ட ரூபா 62,904 பெறுமதியான காசோலை ஒன்று பொது வைப்புக் கணக்கில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தது. | குறித்த நிறுவனத்திற்கு செலுத்தி கணக்கை சரி செய்ய வேண்டும். | இழப்பீட்டுக் காப்பு பிணைமுறி கிடைத்தவுடன் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், 02 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் துணை பதிவேடுகளுக்கு இடையில் ரூபா 10,194,032 ஆன இணங்காமை நிலவியது. | வித்திதயாசத்தை இணக்கஞ் செய்து சீர் செய்யப்பட வேண்டும். | எதிர் காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பெற வேண்டிய கணக்குகள் | | |
| 05 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 109,951 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்குமிடையிலான நிலுவை மீதி ரூபா 2,113,105 ஆனது. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| 05 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 3,283,123 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும் | எதிர் காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை**

தகவலகள் சமர்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 22,558,489 பெறுமதியான 02 கணக்கு விடயங்களிற்குரிய சொத்துக்கள் பதிவேடு மற்றும் பட்டியல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |

### 1.3.5 இணங்காமை

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 3.1 பிரிவு | வாகன எரிபொருள் பாவணை பரீட்சிக்கப்பட்டிருக்ககவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் பரீட்சிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | உள்ளுராட்சி ஆணையாளரின் 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் மமா/உ.ஆ சுற்றறிக்கை இலக்கம் 2016/03 | | | |
| (i) | 06 பிரிவு | பூஜாபிடிய வியாபார கட்டிட தொகுதியில் 33 கடையறைகளிற்காக புதிய மதிப்பீட்டின் மீது உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய உடன்படிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 05(I) பந்தி | அம்பத்தென்ன வியாபார கட்டிடத் தொகுதியில் 2007 ஆண்டு பெறுமதி மதிப்பீட்டின் மீது கடையறை வாடகை அறவிடப்படுகிறது. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மகா சபை அங்கீகாரம் கிடைக்காததன் மீது புதிய மதிப்பீட்டை நடைமுறைப்படுத்த முடியாததாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | 10 பிரிவு | பூஜாபிடிய வியாபார கட்டிட தொகுதியில் 06 கடையறைகள் உப குத்தகை வழங்கப்பட்டிருந்தன. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மகா சபைக்கு முன் வைக்கப்பட்டுள்ளதுடன, எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 16,217,809 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 11,721,181 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | சிட்டையிடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 3,200,000 | 3,216,947 | 2,400,833 | 816,114 | 3,113,959 | 3,187,984 | 2,523,167 | 2,744,670 |
| (ii) | வாடகை | 3,978,600 | 2,788,206 | 2,631,811 | 156,895 | 3,957,540 | 2,578,603 | 2,727,587 | 364,976 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,073,000 | 2,118,250 | 2,118,250 | --- | 2,217,100 | 2,449,000 | 2,449,000 | --- |
| (iv) | ஏனைய வருமானம | 18,652,560 | 22,278,084 | 6,465,433 | 16,042,482 | 17,221,000 | 17,366,135 | 7,243,607 | 28,642,420 |
| | கூட்டுத் தொகை | 27,904,160 | 30,401,487 | 13,616,327 | 17,024,991 | 26,509,594 | 25,581,725 | 14,943,361 | 31,752,066 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வரி வருமானத்தில் ரூபா 816,114 அறவிடப்பட்டிருக்கவில்லை. | வரி வருமானத்தை அறவிட வேண்டும். | எதிர் காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 880,922 ஆனதுடன், முத்திரைக் கட்டணம் ரூபா 17,492,397 ஆனது. | பெறவேண்டிய பணத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். | பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ)** கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுப் பொருள் முகாமைக்கு காணியொன்றை பெற்றுக் கொள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ரூபா 400,000 செலுத்திய போதும், குறித்த காணியை சுவீகரித்துக் கொண்டிருக்கவில்லை. | காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணியை சுவீகரித் கொள்ளவதற்கான அனைத்து நடவடிகைகளும் மேற் கொள்ளப்படுகின்றது. |

**(ஆ)** போதியளவு பூர்த்தி செய்யப்படாத வேலைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அதிகார பிரதேசத்திலுள்ள 25 நீர் கருத்திட்டங்களில் 08 இன் நீர் மாதிரிகள் திருப்தியற்றதாகவும், ஒரு கருத்திட்ட மாதிரி சந்தேகமானது எனவும் அறிக்கையிடப்பட்டிருந்ததால், 25 நீர் கருத்திட்டங்களினதும் நீர் பொது மக்கள் பாவனைக்கு பொருத்தமானதா என்பது தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமை காணப்பட்டது. | பரிசோதனை மூலம் கிடைத்த முடிவுகளின் பிரகாம், சீர் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | நீர் மாதிரி பரிசோதனை ஒன்றை பிரிவுகள் மட்டத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ)** நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அதிகார பிரதேசத்தில் பொது மக்களிற்காக நானாவித வேலைகளை செயற்படுத்தியிருந்த போதும், அவைகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குடன் எவ்வாறு இனங்குகின்றன என்பது தொடர்பாக மதிப்பீடொன்றை மற்றும் பின்னூட்டல் செயற்பாடொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | பின்னூட்டல் செயற்பாட்டை ஒழுங்கமைக்க வேண்டும். | பின்னூட்டல் மற்றும் அறிக்கை தயாரித்தலை எதிர் காலத்தில் மேற்கொள்கிறேன். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினுள் 17 வெற்றிட பதவிகள் நிலவின. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியியை நிரப்பிக் கொள்ள வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரினூடாக கோரிய போதும், வெற்றிடங்கள் நிரம்பவில்லை என அறிவிக்கிறேன். |

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சொத்துக்களை வாடகைக்கு வழங்கல் தொடர்பான குறைபாடுகள். | | |
| அங்கும்புர வியாபார கட்டிடத் தொகுதியில் கடையறை வாடகை அறவிடும் போது, 2016 ஜுன் 30 திகதி வழங்கப்பட்டுள்ள புதிய மதிப்பீட்டை செயற்படுத்தி இருக்கவில்லை | புதிய மதிப்பீட்டை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடை உரிமையாளர்களின் எதிர்பினால் புதிய மதிப்பீட்டை செயற்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தகவல்களை கண்டறிய முடியாத காணிப் பதிவேட்டில் காணப்படும் 05 காணி அலகுகள் தொடர்பாக முன் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணிபப்பீட்டின் மூலம் நிலையான சொத்துக்களை சரியாக இனங்கண்டு முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| போக்குவரத்து திணைக்களத்திலிருந்து கிடைத்திருந்த வேன் வண்டியை சட்டபூர்வமாக சுவீகரித்துக் கொண்டிருக்கவில்லை. | சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | உரிய முறையில் ஒப்படைக்க குறித்த நிறுவனம் நடவடிக்கை எடுக்கவில்லை என அறிவிக்கிறேன். |

**3.4.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான ரூபா 18,277,492 பெறுமதியான 08 இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் விளைவற்று நிலவின. | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களினால் உச்ச பயனை அடைந்து கொள்ள வேணடும். | உள்ளூராட்சி ஆணையாளரினால் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.5 வாகனங்களின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத ரூபா 19,527,492 பெறுமதியான 10 வாகனங்கள் தொடர்பாக ஒழுங்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரினால் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். |